**O.S.No. 260/2018**

**PW1 : சுதா** தேதி 06.02.2026

**வாசா1 மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1, 2 பிரதிவாதிகள் என் சகோதர்கள். 3 ம் பிரதிவாதி சுகுணா 2 ம் பிரதிவாதியின் மனைவி. என் அப்பா லோகநாதன் எந்த வருடம் இறந்தார் என்றால் ஞாபகத்தில் இல்லை. என் அப்பா இறக்கும்போது என் வயது சுமார் 12. 1, 2 பிரதிவாதிகள் என்னுடைய இளைய சகோதரர்கள். எனக்கு 2001 ல் திருமணமானது. என் அப்பா இறந்த பிறகு என் தாயார்தான் எங்கள் மூவரையும் படிக்க வைத்து வளர்த்தார். என் அம்மாவே எனக்கு திருமணம் செய்து வைத்துவிட்டார். என் திருமணத்திற்குப் பின்னிட்டு என் அம்மா எனக்கு சொத்து ஏதேனும் கொடுத்திருக்கிறாரா? என்றால் இல்லை. 25.07.2014 ல் ஒரு சொத்தை என் தாயார் எனக்கு கொடுத்தார் என்றால் சரிதான். என் அம்மாவும் 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து 25.07.2014 ல் ஒரு சொத்தை எழுதிக் கொடுததார்கள். மேற்படி சொத்தை என்ன ஆவணமாக எழுதிக் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. நான் 7 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். 25.07.2014 தேதிய பத்திரத்தை அன்றே நான் பெற்றுக் கொண்டேனா? என்றால் இல்லை. அந்த ப்த்திர்ஙிகளின் அடிபப்ைடிடயில் வருவாய்த்துறை ஆவண்ஙகளை என் பெயரில் மாற்றிக் கொண்டேனா? என்றால் இல்லை. அ து எந்த் சொத்துக்களைப் பொருத்து எழுதப்பட்டது என்பதையும்நான் தெரிந்துகொள்ளவில்லை. அந்த பத்திரத்தில் உள்ள சொத்து தாவாவில் அளந்த அயிட்டமாகக் காட்டப்பட்டுளளது என்றால் தெரியாது. 4 ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தைக் கிரயம் வாங்கியதால் அவரை தரப்பினராகச் சேர்த்திருக்கிறேன். சாந்தலிங்கம் இந்த வழக்கை தாகக்ல் செய்வதற்கு முன்பு ஒரு மாதத்திற்கு முன்பாக கிரயம் பெற்றார். அதன் பிறகுதான் நான் வழக்கை தாக்கல் செய்தேன். சாந்தலிங்கம் கிரயம் வாங்கிய பிறகு சொத்தில் கட்டிடம் கட்டிவிட்டார். என் தம்பிகள் எந்த தேதியில் மோசடியாக ஆவணம் எழுதிக் கொண்டார்கள் என்றால் ஆகஸ்ட் 2018 ல் எழுதிக் கொண்டார்கள். என் கணவருக்கு எழுதப் படிக்கத் தெரியும். என் கணவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் கையெழுத்திடுவார். நானும் தமிழிலும் ஆங்கிலத்திலும் கையெழுத்து போடுவேன். என் தம்பிகள் மீது நான் காவல்நிலையத்தில் 2018 ல் மோசடியாக ஆவண்ஙகளை ஏற்படுத்திக் கொண்டதாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. மோசடியாக ஆவணங்களை ஏற்படுத்திக் கெண்டதகவும நந்த ஆவணங்களின் அடிடபப்டையில் யாரும் கிரயம் பெறக்கூடாது

என்றும் பொது அறிவிப்பு கொடுத்தேனா? என்றால் இல்லை. மேற்படி மோசடி ஆவண்களை ரத்து சய்யக் கோரி பதிவாளரிடம் மனு கொடுக்கவில்லை. பதிவு செய்யக்கூடாது என்று தடங்கல் மனு எதுவும் பதிவாளரிடம் தாக்கல் செய்யவில்லை. 4 ம் பிரதிவாதி யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் தம்பி மனைவியிடமிருந்து கிரயம் வாங்கினார். என் தம்பி மனைவி சுகுணாவிற்கு சொத்துக்கள் எவ்வாறு பாத்தியம் என்று தெரிந்து கொண்டேனா என்றால் என் தம்பி அவர் மனைவி பெயரில் சொத்துகள் எழுதி வைத்திருந்தார். அவ்வாறு என் தம்பி அவரது மனைவி பெயரில் எழுதி வைத்த பத்திரத்மைத ரத்து செய்ய வேண்டுமென்ற வேறு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா? என்றால் இல்லை. இவ்வழக்கில் என் தம்பி அவரது மனைவிக்கு எழுதிக் கொடுத்த பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரவில்லை. சாந்தலிங்கத்தின் கிரயப் பத்திரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. அந்தக் கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் சாந்தலிங்கம் வங்கி பரிவர்த்னை மூலமாக 15.10.2018 தேதியில் ரூ.26,93,000/-க்கு சொதத்துக்களை கிரயம் வாங்கியுளளார் என்றும் அந்த தேதியிலிருநது சொத்தை அவர்தான் அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். ஆரதம்பத்தில் கட்டிடம் கட்டவில்லை.ங பின்னிட் கட்டிட்இ கட்டிடவிட்டார். கட்டிடம் கட்டும்போது ஆட்சேபணை அறிவிப்போ மனுவோ செய்வில்லை. இவ்வழக்கு நிலுவையில் இருக்கம்போதுதாதன் கட்டிடம் கட்டினார். தடை உத்தரவு கோரி மனு எதுவும் இவ்வழக்கில் தாகக்ல் செய்யவில்லை. தற்போது மூன்று மாடி கட்டிடம் உள்ளது. அந்த 3 மாடியில் வாடகைதாரர்கள் உள்ளார்கள், வாடகையை 4 ம் பிரதிவாதிதான் வாங்கி வருகிறார். 4 ம் பிரதிவாதி நல்லெண்ண கிரயதாரர் என்றும் எனக்கும் என் தம்பிாகளுக்கும் இடையேயான பரிவர்த்தனை குறித்து தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் 4 ம் பிரததிதிவாதி பெயரில் பரிகாரம் கோர இயலாது என்றாறல் சரியல்ல. நானே என் விருப்பத்தின் பேரில் விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்த பிறகு தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதிக்கு எதிராக எந்தவித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல.